# பெண்கள் புதிய எழுச்சி பெற வேண்டும்

மக்கள் ஓசை
திங்கட்கிழமை 10 மே 2021

நாடு சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. அது முதல் பல்வேறு பகுதிகளில் நாடு இமாலய வளர்ச்சியைக் கண்டிருக்கிறது - கண்டும் வருகிறது. இந்த சாதனைகளில் ஆண் - பெண் சமத்துவம் என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகவே மாறி விட்டது.

தங்களின் சொந்த நலன்கள் குறித்து குரல் கொடுப்பதற்குக்கூட அவர்களுக்கு சரியான வாய்ப்புகள் வழங்கப்படுவது இல்லை. இதனால் நாட்டு வளர்ச்சி தொடர்பான முடிவுகள் எடுக்கும் நடைமுறைகளில் பங்கேற்பதற்கு அவர்களுக்குப் போதுமான வாய்ப்புகள் கிட்டுவதும் இல்லை.

இந்த மனக்குறை பெண்கள் சிந்தனையில் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு மூலக் காரணமாக இருப்பது 'வளங்கள்' கிடைப்பதில் அவர்களுக்குள்ள சிக்கல்தான் என்று அரசியலில் பெண்களுக்கு சமமான குரல் வேண்டும் எனக் கோரி போராடி வரும் எம்பவர் எனும் அரசு சாரா அமைப்பு வலியுறுத்தி வருகிறது.

இதனாலேயே அரசியலில் பெண்களின் பங்கேற்பு ஆரோக்கியமாக இல்லை. அப்படியே வாய்ப்புக் கிடைத்தாலும் அவர்களால் தனித்துவமாக பிரகாசிக்க இயலவில்லை என்பதை எம்பவர் சுட்டிக்காட்டி இருக்கிறது.

தொடக்கமாக கொள்கை வகுப்பில் பெண்களின் செல்வாக்குக்கு இடமளிக்கப்பட வேண்டும். இதன் மூலம் ஓர் எழுச்சிமிக்கத் தாக்கத்தை அவர்கள் பெறுவர் என்ற சிந்தனையை ஆதிக்கத்தில் இருக்கும் ஆண்கள் ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகவும் அவசியமாகவும் இருக்கிறது.

பெண்களின் குரல்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு சரிசமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இனி வலுப்பெறலாம். இளம் தலைமுறையினரின் அரசியல் ஈடுபாடு இதனைக் கோடிகாட்டுவதாக உள்ளது.



கோப்புப்படம்

அதிகாரத்தில் உள்ளவர்கள் பெண்களின் வாழ்க்கை மற்றும் நலன்களை பலவீனமானதாகவே பார்த்து வருகின்றனர். இனிமேலும் இந்த மனப்போக்கு தொடர வேண்டுமா என்பதை அதிகாரத்தில் உள்ள ஆண்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

பெண்கள் இன்னமும் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே வைக்கப்பட்டுள்ளனர். விருப்பம்போல் செயல்படுவதற்கு இன்னமும் தடைகளும் முட்டுக்கட்டைகளும் போடப்பட்டுத்தான் வருகின்றன. எதைச் செய்ய வேண்டும் - எதைச் செய்யக்கூடாது என்று அவர்களுக்குப் பாடம் கற்பிக்கப்படுகிறது.

அவர்களின் தேர்வுகள் அனைத்தும் அவர்களின் சுய முடிவுகளாக இருப்பதில்லை. சமூகம் சார்ந்ததாகவே இருக்கின்றன. எப்படி உடை உடுத்த வேண்டும். எப்படிப் பேச வேண்டும் என்பதை மற்றவர்கள்தான் முடிவு செய்கின்றனர்.

ஆனால், சமுதாயத்தில் ஒரு பெண் ஒரு சமமான உறுப்பினர் என்பதை பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகள் துடைத்தொழிக்கப்பட வேண்டும் எனக் கோரும் அனைத்துலக சாசனம் உறுதி செய்கிறது.

மலேசியாவில் கலாச்சாரம், பண்பாடு, சம்பிரதாயங்கள் பெண்களுக்கு ஒரு வட்டத்தைப் போட்டு வைத்துள்ளன. ஒரு பெண் நல்லவள் அல்லது கெட்டவள் - இப்படித்தான் அவள் பார்க்கப்படுகிறாள்.

பெண்கள் பற்றிய வியாக்கியானங்களை அதிகாரத்தில் உள்ளவர்கள்தான் நிர்ணயிக்கின்றனர். ஆண் - பெண் இடையிலான சமத்துவ ஏற்றத் தாழ்வுகளும் இவர்களால்தான் வரையறுக்கப்படுகின்றன.

அரசியலில் வாய்ப்புகள் அளிக்கப்பட்டாலும் 'எதிர்பார்ப்பு' எனும் சுமை அவர்களின் தோள்களில் ஏற்றப்படுகிறது. 'எதிர்பார்ப்புகள்' எதிர்பார்த்தபடி இல்லையென்றால் ஒரு பெண்ணின் அரசியல் வாழ்க்கையும் அஸ்தமனமாகி விடுகிறது.

கலாச்சார புரட்சி ஒன்றால் மட்டுமே பெண்களின் அறிவாற்றல், நிர்வாகத் திறன், ஆளுமை ஆகியவை வெளியில் துணிந்து கொண்டு வரப்பட வேண்டும்.

மொத்தத்தில் பெண்கள் பலவீனமானவர்கள், உணர்ச்சி வயப்படக்கூடியவர்கள் என்ற நினைப்பு இனியும் தலையெடுக்க அனுமதிக்கக்கூடாது. பெண்கள் வேறு உருவம் எடுக்க வேண்டும். அதன் எழுச்சி வெற்றியின் உச்சமாக இருக்க வேண்டும்.

- பி.ஆர். ராஜன்

## சுயமாக வேலை செய்யும் தரப்பினருக்கான சமூகப் பாதுகாப்பை விரிவுபடுத்த சொக்சோ திட்டம்

ஷாஆலம், மே 10-
இவ்வாண்டு இறுதிக்குள் சுயமாக வேலை செய்யும் தரப்பைச் சேர்ந்த 200,000 முன்களப் பணியாளர்களுக்கு சமூக பாதுகாப்பினை விரிவுபடுத்த சொக்சோ அமைப்பு முனைந்துள்ளது.

அந்தப் பிரிவின் தரப்பினருக்கு பாதுகாப்பு அம்சங்களை விரிவுபடுத்தும் நோக்கில் 3 சந்தா திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு நிதி அமைச்சு ஆதரவு வழங்கியுள்ளது.

சுய தொழில் பதிவு திட்டம் (எஸ்பிஎஸ்), மகளிர்க்கான பிரிஹாத்தின் பாதுகாப்புத் திட்டம், பெஞ்ஜானா கிக் ஆகியவை அந்த மூன்று திட்டங்களாகும்.

இந்நிலையில் சுயமாக வேலை செய்யும் தரப்பைச் சேர்ந்த பல பிரிவினருக்கு பாதுகாப்பு அம்சங்களை விரிவுபடுத்தவுள்ள சொக்சோவின் திட்டங்களுக்கு தேசியத் தொழிலாளர் மன்றமும் ஆதரவு வழங்கியுள்ளது.

அதில் போக்குவரத்து அமைச்சு, மலேசிய மீன் வள மேம்பாட்டு வாரியம், மலேசியக் கலைஞர்கள் சங்கம் என பல தரப்பட்ட அமைச்சுகளும் தொழிலாளர் சங்கங்களுடனான கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுயமாக வேலை செய்யும் தரப்பினருக்கு பாதுகாப்பு அம்சங்களை கட்டமைப்பதை வலுப்படுத்த மனிதவள அமைச்சுடன் இணைந்து சொக்சோ அமைப்பு தொழிலாளர் காப்புறுதி செயல்பாட்டு சட்ட விதிமுறைகளை (சட்டப் பிரிவு 800) மாற்றி அமைக்கவும் முனைந்துள்ளது என அந்த அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

## அந்த காணொளி ஜிஎம் கிள்ளானில் பதிவு செய்யப்பட்டது அல்ல

கிள்ளான், மே 10-
எஸ்ஓபி விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் மக்கள் கூட்டம் கூட்டமாக இருப்பது போல் சமூக வலைத்தளங்களில் வெளிவந்த காணொளி ஜிஎம் கிள்ளான் மொத்த வியாபார பேரங்காடியில் பதிவு செய்யப்பட்டது அல்ல என்பதனை அதன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஒரு சில பொறுப்பற்ற தரப்பினர் எங்கள் பேரங்காடியில்தான் நடந்தது என்று கூறி சமூக வலைத்தளங்களில் பரப்புகின்றனர்.

ஆனால், அந்த காணொளியில் உள்ளது எங்கள் பேரங்காடியில் பதிவு செய்யப்பட்டது அல்ல என்பதை எங்கள் வாடிக்கையாளர்கள் நன்கு உணர்வர்.

பொய் தகவல்களைப் பரப்பும் தரப்பினர் மீது சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவசர நிலை பிரகடன சட்டத்தில் உள்ளது.

இந்த பொய்ச் செய்தியைப் பரப்புபவர்களுக்கு ஒரு லட்சம் வெள்ளி அபராதம் மட்டுமன்றி 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடும்.

எனவே, எங்கள் பேரங்காடி சம்பந்தப்பட்ட பொய்த் தகவல்கள் குறித்து ஆதாரங்களைத் திரட்டி வருகின்றோம்.

இது தொடர்பில் போலீசிலும் அதிகாரப்பூர்வமாக புகார் செய்யப்படும்.

பொதுமக்கள் இந்த காணொளியை ஜிஎம் கிள்ளான் பேரங்காடி எனப் பெயரிட்டுப் பகிர வேண்டாம் என்று அதன் ஊடக தொடர்பு பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.




## வீட்டுப் பகுதியில் மண் அரிப்பு
### மாற்றுத்திறனாளி தனபால் அச்சம்

●தி. மோகன்





பத்து ஆராங், மே 10-
இப்பகுதியில் வசிக்கும் பி. தனபாலின் வீட்டின் முன்புறம் ஏற்பட்ட மண் அரிப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மாநில அரசாங்கம் மெத்தனப் போக்கைக் காட்டுவது ஏன் என்று ம.இ.கா. சிலாங்கூர் மாநிலத் தொடர்புக் குழுத் தலைவர் எம்.பி. ராஜா கேள்வி எழுப்பினார்.

இந்தப் பகுதியில் தனபால் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டியிருந்தாலும் அவர் ஒரு மாற்றுத் திறனாளியாவார்.

இந்த வீட்டின் கால்வாய் முறையாக சீரமைக்கப் படாததால் மேற்பகுதியிலுள்ள வீடுகளிலிருந்து வரும் கால்வாய் நீர் தனபாலின் வீட்டுப் பகுதியில் தேங்கிவிடுகிறது.

இச்சூழ்நிலையில் சில தினங்களுக்கு முன்பு தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக அங்கு மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் மாநில அரசாங்கத்திற்கு புகார் வழங்கியபோது, அவர்கள் புறம்போக்கு நிலத்திலுள்ள வீடுகளுக்கு இதுபோன்ற உதவிகளை செய்து தர முடியாது எனக் கூறியதாக கேள்வியுற்றோம்.

அது உண்மையாயின் அது அவர்களின் இந்த பதில் கண்டிக்கத்தக்கதாகும் என்றார் அவர்.

இதற்கிடையே, ஏற்கெனவே தனபாலின் வீட்டுப் பகுதியில் இது போன்ற பிரச்சினை ஏற்பட்டபோது, ம.இ.கா. சார்பில் 8 ஆயிரம் வெள்ளி செலவில் தடுப்புச் சுவர் கட்டித் தரப்பட்டது.

ஆனாலும், சமீபத்தில் தொடர் மழையின் காரணமாக மண் அரிப்பு ஏற்பட்டு அந்த தடுப்புச் சுவரும் இடிந்துவிட்டது.

எனவே, ம.இ.கா.வினர் தனபாலுக்கு உதவ அடுத்த கட்ட நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்கப்படும் எனவும் எம்.பி. ராஜா உறுதி அளித்தார்.

செபெராங் பிறை மாநகர் மன்றம்
1976 மாநகர் மற்றும் புறநகர் திட்ட சட்டம் (சட்டம் 172) பிரிவு 13 (2)
கீழ் விடுக்கப்படும் அறிவிப்பு

நோட்டீஸ்
2030 செபெராங் பிறை மேம்பாட்டு வரைவுத் திட்டம்
பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

2030 செபெராங் பிறை உள்ளூர் மேம்பாட்டுத் திட்ட வரைவு பிரதிகளைக் கீழ்க்குறிப்பிட்ட இடம், நாள், நேரத்தில் பொதுமக்கள் பரிசீலிக்கலாம்:

இடம் :
1. RUANG LEGAR, செபெராங் பிறை மாநகர் மன்ற மெனாரா பாண்டாராயா, ஜாலான் பெர்டா உத்தாமா, பாண்டார் பெர்டா, புக்கிட் மெர்தாஜம்.
2. PlanMALAYSIA @ PULAU PINANG, 57ஆவது மாடி, கொம்தார்.
3. மாவட்ட மற்றும் நில அலுவலகம், செபெராங் பிறை உத்தாரா, பெர்த்தாம், கப்பளா பத்தாஸ்.
4. மாவட்ட மற்றும் நில அலுவலகம், செபெராங் பிறை தெங்கா, ஜாலான் பெத்தெக், சுங்கை ரம்பாய்.
5. மாவட்ட மற்றும் நில அலுவலகம், செபெராங் பிறை செலாத்தான், சுங்கை ஜாவி.

நாள் : 12 ஏப்ரல் 2021 - 11 ஜூன் 2021 (வேலை நாட்களில் மட்டும்)
நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.

2030 செபெராங் பிறை உள்ளூர் மேம்பாட்டுத் திட்ட வரைவை சரிபார்க்க பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர். ஆட்சேபங்களை அதற்கான பாரங்கள் (Borang Maklumbalas) அல்லது மகஜர், அதிகாரப்பூர்வக்கடிதம் அல்லது இணையதளம் வழி 11 ஜூன் 2021ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாகவோ கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் சமர்ப்பிக்கலாம்.

Datuk Bandar
Majlis Bandaraya Seberang Perai, Menara Bandaraya
Jalan Perda Utama, Bandar Perda
14000 Bukit Mertajam
Website: www.mbsp.gov.my

STAY AT HOME / வீட்டிலேயே இருங்கள்

கொரோனா பாதிப்பு (9.5.2021 உலக நிலவரம்)

| | நோயாளிகள் | மரணங்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|
| உலகம் | 158,379,941 | 3,298,442 | 135,881,063 |
| மலேசியா | 440,677 | 1,683 | 401,934 |

IN